# வறுமையும் பெண்களும்



தயாமினி H.சேரன்,
ச. சிறிகிருஸ்ணா

சீடா மீள்கட்டுமானத்திட்டம்
கிழக்குப் பல்கலைக்கழகம்
இலங்கை

# வறுமையும் பெண்களும்

தயாமினி H. சேரன்,

ச. சிறிகிருஸ்ணா

வெளியீடு:

சீடா (CIDA) மீள் கட்டுமானத் திட்டம்

கிழக்குப் பல்கலைக்கழகம்,

இலங்கை.

2008.

## நூல் விபரங்கள்

தலைப்பு : வறுமையும் பெண்களும்

பதிப்புரிமை : ஆசிரியர்களுக்கு

மொழி : தமிழ்

நூலாசிரியர்கள் : தயாமினி H. சேரன், ச. சிறிகிருஸ்ணா

வெளியீடு : சீடா மீள் கட்டுமானத் திட்டம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

பக்கங்கள் : viii + 28=36

ISBN : 978-955-1443-22-1

## Bibliographical Data

Title : Varumaiyum Penkalum(Poverty and Women)

Copyright © : Authors

Language : Tamil

Authors : Thayamini H. Seran  S. Srikrishnah

Reviewed by : M. Ravi B.A.(sp) Hons, M.Phil
Senior Lecturer
Dept. of Social Science, Eastern University.

Published by : CIDA Restore Project, Eastern University,
Sri Lanka

Pages : viii + 28=36

ISBN : 978-955-1443-22-1

Print

Michael's Mobile Printers
90, Bar Road, Batticaloa.
Tel - 060 2642012, 065 4900485

## முன்னுரை

தற்போது இலங்கை உள்பட பல்வேறு நாடுகளில் எதிர்நோக்கப் படும் ஓர் பாரிய பிரச்சினை வறுமையாகும். உலகில் வறுமையால் வாடும் மக்களில் அதிகமானோர் பெண்களாகும். பெண்கள் வறுமை நிலைக்குள் ளாவதற்கு சமகாலத்தில் நிலவும் பல்வேறு சமூக, பொருளாதார, அரசியற் காரணிகள் காரணமாகின்றன. இதனால் வறுமைக் கோட்டிற்குள் ஈர்க்கப் படும் பெண்களின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரிக்கிறது. எனவே வறுமையானது தற்போது பெண்ணிலைப்படுத்தப்படுகின்றது.

இந்நூலில் வறுமை, வறுமைக்குரிய தோற்றுவாய்கள், வறுமையி னால் உண்டாகும் விளைவுகள் மற்றும் வறுமை ஒழிப்பிற்குரிய வழிவகை கள் என்பன சுருக்கமான முறையில், இலகுவாக விளங்கக்கூடியவாறு கூறப்பட்டுள்ளது. மேலும், வறுமை ஒழிப்பில் பெண்களின் பங்களிப்பினைப் பற்றியும் விபரிக்கப்பட்டுள்ளது.

வளர்முக நாடுகளில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடும் பெண் களின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரிக்கிறது. எனவே விவசாய அபிவிருத்தி மூலமும் வறுமையை ஒழிக்கலாம். இந்நூலில் வறுமை ஒழிப்பில் விவசாய அபிவிருத்தியின் பங்கினைப் பற்றியும் விவசாயத்தில் பெண்களின் பங்களிப்பினைப் பற்றியும் விபரிக்கப்பட்டுள்ளது.

சுருங்கக்கூறின் வறுமை பற்றிய ஓர் விழிப்புணர்வினை சமுதாய மட்டத்தில் குறிப்பாக பெண்களிடத்தில் ஏற்படுத்தும் நோக்கில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

**நூலாசிரியர்கள்**

**01.08.2008**

## Office of CIDA Restore Project

## Eastern University, Sri Lanka.

**Publication Number :** 006

**Name of the Book :** Poverty and Women

**Name of the Author :** Dr. T.H. Seran
S. Srikrishnah

Printed with Financial Assistance from the

Canadian International Development Agency (CIDA)

Under the CIDA Restore Project

# உள்ளடக்கம்...

| | பக்கம் |
|---|---|
| **1. அறிமுகம்** | 01 |
| **2. வறுமை** | 02 |
| 2.1 வறுமை என்றால் என்ன? | 02 |
| 2.2 வறுமைக் கோடு என்றால் என்ன? | 02 |
| 2.3 வறுமைக்கான தோற்றுவாய்கள் | 03 |
| 2.3.1 சூழலியற் காரணிகள் | 03 |
| 2.3.2 பொருளாதாரக் காரணிகள் | 04 |
| 2.3.3 சமூகக் காரணிகள் | 05 |
| 2.3.4 அரசியற் காரணிகள் | 06 |
| 2.3.5 சுகாதாரக் காரணிகள் | 07 |
| 2.4 வறுமையின் விளைவுகள் | 08 |
| 2.4.1 சமூகப் பிரச்சனைகள் | 08 |
| 2.4.2 பொருளாதாரப் பிரச்சனைகள் | 08 |
| 2.4.3 சுகாதாரப் பிரச்சனைகள் | 09 |
| **3. வறுமை ஒழிப்பு** | 10 |
| 3.1 வறுமை ஒழிப்பின் முக்கியத்துவம் | 10 |
| 3.2 வறுமை ஒழிப்பிற்குரிய வழிவகைகள் | 10 |
| 3.2.1 பொருளாதார அபிவிருத்தி | 10 |
| 3.2.2 கல்வி அபிவிருத்தி | 12 |
| 3.2.3 சுகாதார அபிவிருத்தி | 13 |
| 3.2.4 சமுதாய அபிவிருத்தி | 14 |

**4. வறுமை ஒழிப்பில் பெண்கள்** 15

4.1 வறுமையும் பெண்களும் 15

4.2 வறுமையால் பெண்கள் அதிகம் பாதிக்கப்படுவதற்கான காரணங்கள் 15

4.3 வறுமை ஒழிப்பில் பெண்கள் எவ்வாறு பங்களிப்பு வழங்க முடியும்? 17

4.4 வறுமை ஒழிப்பில் பெண்களின் பங்களிப்பினை எவ்வாறு அதிகரிக்கலாம்? 18

**5. விவசாயமும் பெண்களும்** 20

5.1 வறுமை ஒழிப்பில் விவசாய அபிவிருத்தி 20

5.2 விவசாய அபிவிருத்தியால் ஏற்படும் நன்மைகள் 21

5.3 விவசாய அபிவிருத்திக்குரிய வழிவகைகள் 22

5.4 தற்காலத்தில் பெண்கள் அதிகளவில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான காரணங்கள் 24

5.5 விவசாயத்தில் பெண்களின் பங்களிப்பு 25

**6. முடிவுரை** 27

**7. உசாத்துணை** 28

# 1. அறிமுகம்

**"உலக சனத்தொகையில் 20 வீதத்திற்கும் அதிகமான மக்கள் வறுமையில் வாடுகிறார்கள், இதில் 70 வீதமானோர் பெண்களாகும்"**

ஐ.நா. சபையின் 4வது பெண்களுக்கான மாநாட்டில் (பெய்ஜிங், 1995), ஐ.நா. உணவு விவசாயத் ஸ்தாபன இயக்குனர் நாயகம் Dr. Jacques Diouf

தற்காலத்தில் பெண்கள் பல்வேறுபட்ட துறைகளில் முன்னேறினாலும் பல சவால்களுக்கும் முகம் கொடுக்கிறார்கள். அவ்வாறான சவால்களில் முக்கியமானது வறுமையாகும். ஏனெனில் உலகில் வறுமையால் வாடும் சனத்தொகையில் பெரும்பான்மையானோர் பெண்களாகும். மேலும் வறுமைக் கோட்டிற்குள் உள்ளீர்க்கப்படும் பெண்களின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரிப்பது வளர்முக நாடுகளில் பொதுவான பிரச்சினை யாகும்.

கல்வி, தொழில் வாய்ப்புகள், நிருவாகம், தீர்மானங்களை எடுத்தல், சொத்துரிமை, வாரிசுரிமை என்பவற்றில் ஆண்களுக்கே முன்னுரிமை வழங்கப்படுகிறது இது பால்நிலை சமத்துவமின்மையின் விளைவுகளாகும். இவ்வாறான காரணங்களால் பெண்கள் ஆண்களைவிடக் குறைவான வளங்களையே அனுபவிக்க நேருவதுடன், வறுமை நிலைக்கும் தள்ளப்படு கிறார்கள். யுத்தம், நோய்கள் மற்றும் ஏனைய சமூகப் பொருளாதாரக் காரணிகளால் பெண்களைத் தலைவர்களாகக் கொண்ட குடும்பங்களின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு செல்கிறது. இவ்வாறான குடும்பங்களில் எதிர்காலச் சந்ததியினரை உருவாக்கும் பொறுப்பு முற்றுமுழுதாக பெண்களின் கைகளிலேயே தங்கியுள்ளது.

இவ்வாறான காரணங்களால் வறுமையை ஒழிப்பதற்கு பெண்களே அதிகளவு பங்களிப்பினை வழங்க வேண்டும். வறுமை ஒழிப்புத் திட்டங்க ளில் பெண்கள் முன்வந்து தமது பூரண ஒத்துழைப்பினை வழங்குவதன் மூலமே உண்மையான அபிவிருத்தியைப் பெறமுடிவதோடு, சுபீட்சமான தொரு எதிர்காலத்தை தமது வருங்காலச் சந்ததியினருக்குப் பெற்றுக் கொடுக்க முடியும்.

# 2. வறுமை

## 2.1 வறுமை என்றால் என்ன?

வறுமை என்ற பதத்திற்கு பல்வேறு நாடுகளிலும் பல்வேறு ஸ்தாபனங்களா லும் வெவ்வேறு விதமான வரைவிலக்கணங்கள் கொடுக்கப்படுகிறது. பொதுவாக வறுமையானது வாழ்க்கைத் தரத்தை பாதிக்கும் ஓர் காரணியா கவே கருதப்படுகிறது.

உணவு, உடை, உறையுள், சுத்தமான குடிநீர் மற்றும் மருத்துவ வசதி போன்ற அத்தியவாசியத் தேவைகளில் ஒன்றையோ அல்லது பலவற் றையோ பூர்த்தி செய்யமுடியாத நிலை வறுமை என பல அபிவிருத்தி யடைந்து கொண்டிருக்கும் நாடுகளில் வரைவிலக்கணப்படுத்தப்படுகிறது. எனினும் அபிவிருத்தி அடைந்த நாடுகளில், சகபிரஜைகள் அனுபவிக்கும் வளங்களையும், உரிமைகள் மற்றும் சலுகைகளையும் அனுபவிக்க முடியாத நிலையும் வறுமை என அடையாளப்படுத்தப்படுகிறது.

வறுமையானது தனிநபர்களை அல்லது ஒட்டுமொத்த சமுதாயத்தைக் கூட பாதிக்கலாம். மேலும் வறுமை என்பது வளர்முக நாடுகளுக்கு மட்டும் உரித்தான இயல்பு அல்ல. ஆனால் வறுமைக்கான வரைவிலக் கணங்கள் அபிவிருத்தியடைந்த நாடுகளிலும் அபிவிருத்தி அடைந்து கொண்டிருக்கும் நாடுகளிலும் வேறுபடலாம்.

## 2.2 வறுமைக்கோடு

குறிப்பிட்ட நாட்டில் தனிநபரின் அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்ய தேவையான மிகக்குறைந்தளவு மாதாந்த வருமானம் வறுமைக்கோடு எனப்படும். வறுமைக்கோட்டிற்கு கீழே மாதாந்த வருமானம் செல்லும்போது வறுமைநிலை எனக்கூறப்படும்.

வறுமைக்கோடானது நாட்டிற்கு நாடு வேறுபடுவதுடன் அபிவிருத்தியடைந்து கொண்டிருக்கும் நாடுகளை விட அபிவிருத்தியடைந்த நாடுகளில் அதிகளவில் காணப்படும்.

**உதாரணம் :**
இலங்கையில் வறுமைக்கோடு (2002) - ரூ 1,423.00

## 2..3 வறுமைக்கான தோற்றுவாய்கள்

வறுமை ஏற்படுவதற்கான தோற்றுவாய்களை 5 வகைகளாகப் பிரிக்கலாம். அவையாவன:

### 2.3.1 சூழலியற் காரணிகள்

- காடழிப்பு

அபரிமிதமான காடழிப்பானது தரிசு நிலங்களை உருவாக்குவதோடு மழைவீழ்ச்சியையும் குறைவடையச் செய்கிறது. இதனால் விவசாய உற்பத்திகள் பாதிப்படைவதால் வறுமை ஏற்படக் காரணமாகிறது.

- மண்ணரிப்பு

அதிகூடிய மண்ணரிப்பினால் மண் கழுவப்பட்டு நிலவளம் குன்றுகின்றது. இதனால் பாதிக்கப்பட்ட நிலம் பயிர்ச்செய்கைக்கு ஒவ்வாததாக மாற்றமடைகின்றது. மேலும் அரிக்கப்பட்ட மண்ணானது நீர்நிலைகளைச் சென்று அடைவதால் அவற்றின் கொள்ளளவு குறைக்கப்படுகிறது. இதனால் கோடைகாலங்களில் வறட்சியும் மழைக்காலங்களில் வெள்ளப்பெருக்கும் ஏற்பட்டு வறுமைக்கு காரணமாக அமைகிறது.

- காலநிலை மாற்றங்கள்

அதிக வெப்பம், மழைவீழ்ச்சி குறைவடைதல், நீர்பற்றக்குறை, வரட்சி, பாலைநிலமாதல் போன்ற காலநிலை மாற்றங்களால் விவசாய உற்பத்தி

மற்றம் ஏனைய ஜீவனோபாயத் தொழில்கள் பாதிப்படைவதால் வறுமை தோன்றுகிறது. வசதியுள்ள குடும்பங்கள் இடம்பெயர ஏனைய குடும்பங்கள் வறுமையில் வாடுகின்றன.

- **இயற்கை அனர்த்தங்கள்**

சூறாவளி, வெள்ளப்பெருக்கு மற்றும் சுனாமி போன்ற இயற்கை அனர்த் தங்கள் மக்களின் உயிர்களுக்கும் உடைமைகளுக்கு பாரிய சேதத்தை விளைவித்து அவர்களின் வாழ்க்கைத் தரத்தை வெகுவாகப் பாதிக்கிறது.

- **புவியியற் காரணிகள்**

வளமான மண், நீர், கனியுப்பு, தாதுப்பொருட்கள், எரிபொருட்கள் மற்றும் சீரான காலநிலை போன்ற இயற்கை வளங்கள் ஒரு பிரதேசத்தின் செழிப்பினை தீர்மானிக்கிறது. இவ்வாறான வளங்கள் பிறிதொரு பிரதேசத்தில் காணப்படாமை வறுமைக்குரிய தோற்றுவாயாக அமைகின்றது.

### 2..3.2 பொருளாதாரக் காரணிகள்

- **வேலைவாய்ப்புகள் இன்மை**

வேலைவாய்ப்புகள் தகமைக்கு ஏற்றவகையில் கிடைக்காமல் போதல், அல்லது வேலைவாய்ப்பு இன்மை போன்றவற்றால் குடும்ப வருமானம் குறைவடையும். இதனால் அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாமற் போகலாம்.

- **வருமானம் குறைவடைதல்**

குடும்ப வருமானம் குறைவடைதால் குடும்பத்தில் பொருளாதார நெருக்க டிகள் தோன்றும். இதனால் அத்தியாவசியத் தேவைகளை நிறைவேற்ற முடியாமற் போகலாம்.

- **வாழ்க்கைச் செலவு அதிகரித்தல்**

வாழ்க்கைச் செலவு அதிகரிக்கும் போது சேமிப்பு குறைவடையும். இதனால் நெருக்கடியான காலங்களில் அல்லது தொழில் அற்ற காலங்களில் செலவுகளைச் சமாளிக்க முடியாமற் போகலாம்.

- **சனத்தொகை அதிகரிப்பு**

சனத்தொகை அதிகரிப்பானது வேலைவாய்ப்புக்களைக் குறைப்பதோடு பொருளாதார நெருக்கடிகளையும் நாட்டில் ஏற்படுத்தும்.

- **வெளிநாட்டு முதலீடுகள் குறைதல்**

வெளிநாட்டு முதலீடுகள் குறைவடைதலானது வேலையில்லாப் பிரச்சினை யைத் தோற்றுவிக்கும்.

### 2..3..3 சமூகக் காரணிகள்

- **கல்வியறிவு வீதம் குறைவடைதல்**

கல்வியறிவு வீதம் குறைவடைதலானது (முக்கியமாகப் பெண்களின்) கூடிய வருமானமுள்ள வேலைவாய்ப்புக்களைப் பெறுவதில் தடங்கல்களை ஏற்படுத்தும். இதனால் குடும்ப வருமானம் குறைவதோடு வாழ்க்கைத் தரமும் பாதிக்கப்படும்.

- **பெண்களைத் தலைவர்களாகக் கொண்ட குடும்பங்களின் தோற்றம்**

யுத்தம், நோய் போன்ற காரணிகளால் குடும்பத் தலைவர்கள் இழக்கப்படல் அல்லது தொழில் செய்யமுடியாமற் போதல். இதனால் குடும்பப் பொறுப்புகள் பெண்களின் தலையில் சுமத்தப்படும். எனவே குடும்ப வருமானம் பாதிக்கப்படும்.

- பெண்கள் வேலைக்கு செல்வதில் உள்ள தடங்கல்கள்

சில சமுதாய சூழ்நிலைகளால் பெண்கள் வேலைக்குச் செல்ல முடியாத நிலை ஏற்படுகிறது. இதனால் குடும்ப வருமானம் குறைவடைகிறது.

- அதிகரித்த மது மற்றும் போதைப்பொருட்பாவனை

குடும்பத் தலைவர்களும் குடும்ப உறுப்பினர்களும் மது மற்றும் போதைப் பொருட்களின் பாவனைக்கு உள்ளாவதால் குடும்ப வருமானம் குறைவடைதல்.

- அறிவாளிகளின் வெளியேற்றம்

துறைசார் வல்லுனர்களும் கல்வியாளர்களும் நாட்டைவிட்டு வெளியேறுவதால் தொடர்ச்சியான பொருளாதார அபிவிருத்தி திட்டங்களை மேற்கொள்ள இயலாதிருத்தல்.

### 2.3.4 அரசியற் காரணிகள்

- ஸ்திரமற்ற அரசியல் நிலை

அடிக்கடி ஆட்சி மாற்றங்கள் நிகழ்தல், பெரும்பான்மைப் பலமற்ற அரசாங்கம், உள்நாட்டு குழப்பங்கள் போன்றவற்றால் நாட்டில் நீண்டகாலப் பொருளதாரத் திட்டங்களை அமுல்படுத்தமுடியாமற் போதல். மேலும் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பதோடு வெளிநாட்டு முதலீடுகளும் குறைவடையும்.

- உள்நாட்டு யுத்தம்

உள்நாட்டு குழப்பங்களால் மக்களின் இடப்பெயர்வுகள் அதிகரிக்கும். வருமானம் தொழில்வாய்ப்புகள் முக்கியமாக ஜீவனோபாயத் தொழில்கள் பாதிக்கப்படும். மேலும் பெண்களைத் தலைவர்களாகக் கொண்ட குடும்பங்கள் உருவாகும்.

- ஊழல்

அதிகூடிய ஊழல், சட்டம் ஒழுங்கு பாதிப்படைதல் போன்றவைகளும் வறுமைநிலையைத் தோற்றுவிக்கும்.

- **அபிவிருத்தித் திட்டங்கள் முறையாக முன்னெடுக்கப்படாமை**

பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களையும் வறுமை ஒழிப்புத் திட்டங்களையும் முறையாக அமுல்படுத்த முடியாமற் போதலும் வறுமை நீடித்திருக்கக் காரணமாக அமையும்.

### 2..3.5 சுகாதாரக் காரணிகள்

- போசணைக் குறைபாடுகள்

இளவயதில் போசணைக்குறைபாடுகளுக்கு, உதாரணமாக இரும்பு அயடீன் போன்ற குறைபாடுகளுக்கு உள்ளாவதால் உடல், உள, வளர்ச்சி என்பன பாதிக்கப்படும். இவ்வாறான காரணங்களால் இளவயதிலேயே நோய்களுக்கு உள்ளாவதோடு பொருளாதார நெருக்கடிகளுக்கும் ஆளாக நேரிடும்.

- சுகாதார சேவைகளைப் பெறுவதில் உள்ள தடங்கல்கள்

கிராமப்புறங்களிலும் தோட்டப்பகுதிகளிலும் சுகாதார சேவைகளைப் பெறுவதிலுள்ள தடைகள் ஆரோக்கியமற்ற சந்ததிகள் உருவாக வழிவகுக்கும்.

- தொற்று நோய்கள்

எயிட்ஸ், மலேரியா மற்றும் காசநோய் போன்ற தொற்று நோய்கள் சமுதா யத்திலுள்ள அங்கத்தவர்களைத் தாக்குவதன் மூலம் சமுதாய வளர்ச்சி யைப் பாதிக்கும். இந்நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் தொழில் செய்ய

முடியாத நிலைக்கு உள்ளாவதோடு, இளவயதிலேயே இறக்க நேரிடுகிறது. எனவே இந்நோய்கள் வறுமைக்குரிய நோய்கள் என அழைக்கப்படுகின்றது.

## 2.4 வறுமையின் விளைவுகள்

### 2.4.1 சமூகப் பிரச்சினைகள்

1. பெண்கள் மற்றும் ஆண்கள் வேலைவாய்ப்புகளுக்காக வேறு இடங்களுக்கு அல்லது வேறுநாடுகளுக்கு இடம் பெயரல்.
2. சிறுவர் தொழிலாளர்கள் உருவாக்கப்படல்.
3. சிறுவர்கள் பாடசாலைக்கல்வியை தொடர முடியாத நிலை ஏற்படல்.
4. குடும்ப உறுப்பினர்களிடையே மது மற்றும் போதைப் பொருட் பாவனை அதிகரித்தல்.
5. குடும்பங்களில் ஸ்திரமற்ற தன்மை தோன்றல்.
6. பெண்கள் பாலியல் ரீதியான சுரண்டல்களுக்கு உள்ளாகுதல்.
7. வன்முறைகள், திருட்டு என்பன அதிகரித்தல்.
8. கிராமப் புறங்களை விட்டு நகரங்களை நோக்கி மக்கள் இடம்பெயரல்.
9. வறுமையால் வாடும் குடும்பங்கள் சமுதாயத்திலிருந்து தனிமைப்படுத்தப்படல்.
10. தற்கொலைகளின் எண்ணிக்கை அதிகரித்தல்.
11. தெருவோரச் சிறார்கள் உருவாகுதல்.

### 2.4.2 பொருளாதாரப் பிரச்சினைகள்

1. வாழ்க்கைத்தரம் பாதிக்கப்படல்.
2. அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்ற முடியாத நிலை தோன்றல்.

3. சேமிப்பு அற்றுப் போதல் அல்லது குறைவடைதல்.
4. இறக்குமதிச் செலவுகள் அதிகரித்தல்.
5. முதலீடுகள் குறைவடைதல்.

### 2.4.3 சுகாதாரப் பிரச்சினைகள்

1. சுத்தமான குடிநீர், போசாக்கான உணவு கிடைக்காமற் போதல்.
2. பெண்களும் சிறுவர்களும் அதிகளவில் போசணைக் குறைபாடுகளுக்கு உள்ளாகுதல்.
3. வைத்திய ஆலோசனைகளையும், சிகிச்சைகளையும் பெறமுடியாமற் போதல்.
4. சிசுமரணவீதம் அதிகரித்தல்
5. ஆயுள் எதிர்பார்ப்புக் குறைவடைதல்
6. இலகுவில் நோய்த்தாக்கத்திற்கு உள்ளாகுதல்

# 3. வறுமை ஒழிப்பு

> "வறுமையையும் பட்டினியையும் 2015ம் ஆண்டிற்குள் முற்றாக ஒழித்தல் என்பது மிலேனியம் அபிவிருத்தி இலக்குகளில் முதன்மையான ஒன்றாகும்."

## 3.1 வறுமை ஒழிப்பின் முக்கியத்துவம்

வறுமை என்பது அபிவிருத்திக்கு ஓர் பாரிய தடையாகும். வறுமை நிலையை முற்றாக ஒழிப்பதன் மூலமே உண்மையான சமூக பொருளாதார வளர்ச்சியையும் அபிவிருத்தியையும் ஏற்படுத்த முடியும். ஏனெனில் வறுமை யானது பல்வேறு சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகளுடன் தொடர்பு பட்டுள்ளது. எனவே வறுமையை ஒழிப்பதன் மூலமே அதனுடன் இணைந் துள்ள பிரச்சினைகளைத் தீர்க்க முடியும்.

## 3.2 வறுமை ஒழிப்பிற்குரிய வழிவகைகள்

வறுமையானது கல்வி, பொருளாதார, சமூக மற்றும் சுகாதார அபிவிருத் திகள் மூலமே ஒழிக்கப்படலாம்.

### 3.2.1 பொருளாதார அபிவிருத்தி

- **தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல்**

  புதிய தொழில் முயற்சிகளை ஊக்குவித்தல், வெளிநாட்டு வேலை வாய்ப்புகளைப் பெற்றுக்கொடுத்தல், புதிய தொழிற்சாலைகளை ஆரம்பித்தல் மூலமாக வேலைவாய்ப்புக்களை அதிகரிக்கலாம்.

- **சுயதொழில்களை ஊக்குவித்தல்**

தையல், விவசாய உற்பத்திப் பொருட்களை பதனிடல், உணவுப் பொருட்களை உற்பத்தி செய்தல் போன்ற சுயதொழில் முயற்சி களை ஊக்குவித்தல். சுயதொழில் முயற்சிகளுக்கு கடன் வசதிகளைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் பொருத்தமான தொழில் வழிகாட்டல்களை மேற்கொள்ளல்.

- **ஜீவனோபாயத் தொழில்களை வலுவூட்டல்**

விவசாயம், கால்நடை வளர்ப்பு, மீன்பிடி போன்ற ஜீவனோபாய தொழில்களை அபிவிருத்தி செய்தல். அத்தொழில்களில் ஈடுபட்டுள்ளோரின் வாழ்க்கைத்தரத்தினை உயர்த்துதல்.

- **வெளிநாட்டு மூதலிடுகளை ஊக்குவித்தல்**

வெளிநாட்டு மூதலீடுகளை அதிகரிப்பதன் மூலம் புதிய தொழிற் சாலைகளையும் சுதந்திர வர்த்தக வலயங்களையும் ஆரம்பித்து தொழிவாய்ப்புக்களை அதிகரிக்கலாம்.

- **வறுமை ஒழிப்புத் திட்டங்களை முன்னெடுத்தல்**

வறுமைக்கோட்டிற்கு கீழே வாழ்பவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முயற்சிகளை மேற்கொள்ளல். சிறுசேமிப்பு, நுண்கடன் போன்ற வறுமை ஒழிப்பு திட்டங்களை முன்னெடுத்தல்.

- **வறுமை ஒழிப்புத் திட்டங்களைக் கண்காணித்தல்**

திறனான கண்காணிப்பு மற்றும் மதீப்பிட்டு முறைகள் மூலம் வறுமை ஒழிப்புத் திட்டங்களின் பெறுபேறுகளை ஆராய்தல் மற்றும் மீள ஒழுங்கமைத்தல்.

3.2.2 கல்வி அபிவிருத்தி

- கல்வியைக் கட்டாயமாக்குதல்

ஆரம்பக் கல்வியை ஆண், பெண் இருபாலருக்கும் கட்டாயமாக்குல். இதனால் கல்வியறிவு வீதத்தை அதிகரிக்கலாம்.

- இலவசக் கல்வி

கல்வியையும் பாடப்புத்தகங்களையும் இலவசமாக வழங்குவதன் மூலம் வறிய மாணவர்களின் கல்வியறிவை விருத்தி செய்யலாம். மேலும் மதிய உணவு வழங்கல், புலமைப்பரிசில்கள் மூலமும் கல்வியைத் தொடர வறிய மாணவர்களை ஊக்குவித்தல்.

- தகவல் தொழிநுட்ப அபிவிருத்தி

தகவல் தொழிநுட்ப கல்வியை அபிவிருத்தி செய்வதன் மூலம் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வேலைவாய்ப்புகளை பெற்றுக் கொடுத்தல்.

- தொழிற்கல்வியை ஊக்குவித்தல்

விவசாயம், எந்திரவியல் போன்ற தொழிற்கல்விகளை அபிவிருத்தி செய்தல்.

- கல்வியில் பால்நிலை சமத்துவமின்மையை ஒழித்தல்

ஆண், பெண் இருபாலருக்கும் கல்வியைப் பெறுவதில் சமவாய்ப் புகளை வழங்கல்.

### 3.2.3 சுகாதார அபிவிருத்தி

- **போசாக்கின்மையை ஒழித்தல்**

  வறிய குழந்தைகள் மற்றும் கர்ப்பணிப் பெண்களுக்குப் போசாக் கான உணவுகளை இலவசமாக வழங்கி, போசாக்கின்மை யிலிருந்து பாதுகாத்தல்.

- **தடுப்பூசி ஏற்றல்**

  போலியோ, அம்மை போன்ற நோய்களிலிருந்து சிறுவர்களை பாதுகாக்க தடுப்பூசி வழங்குதல்.

- **சுத்தமான குடிநீர்**

  மக்கள் அனைவருக்கும் சுத்தமான குடிநீர் கிடைப்பதை உறுதி செய்தல்.

- **வறுமைக்குரிய நோய்களை ஒழித்தல்**

  வறுமைக்கான நோய்களான மலேரியா, எய்ட்ஸ் மற்றும் காசநோய் என்பவற்றை ஒழித்தல். அவை பற்றிய விழிப்புணர்வை மக்களி டத்தில் ஏற்படுத்தல்.

- **சுகாதார வசதிகளை மேம்படுத்தல்**

  இலவச மருத்துவ வசதிகளை வழங்குதல், சிகிச்சை மற்றும் நோய்த்தடுப்பு முறைகளைத் தரமுயர்த்தல்.

### 3.2.4 சமுதாய அபிவிருத்தி

- **பால்நிலை சமத்துவமின்மையை ஒழித்தல்**

  ஆண், பெண் இருபாலருக்கும் சமுதாயத்தில் சமவுரிமை வழங்குதல்.

- **சமூகக்கட்டுப்பாடுகளைத் தளர்த்தல்**

  பெண்கள் உயர்கல்வியை மேற்கொள்ளல், வேலைக்குச் செல்லல் போன்றவற்றிலுள்ள சமூகக்கட்டுப்பாடுகளை தளர்த்தல்.

- **உளவள ஆலோசனைகள் வழங்கல்**

  குடும்பங்களிலுள்ள பிரச்சினைகள், விரக்தி என்பவற்றை தீர்க்க உளவள ஆலோசனைகளை வழங்கல்.

- வறுமை பற்றிய விழிப்புணர்வை சமுதாய மட்டத்தில் ஏற்படுத்தல்

  வறுமைக்கான காரணங்கள், வறுமையால் உண்டாகும் விளைவு கள் மற்றும் வறுமையைத் தீர்ப்பதற்கான வழிவகைகள் பற்றிய விழிப்புணர்வை மக்களிடத்தில் எற்படுத்தல்.

- சுமூகமானதொரு வாழ்விற்கு வழிவகுத்தல்

  வன்முறை, குழப்பங்கள், முரண்பாடுகளைக் களைதல், சட்டம் ஒழுங்கை நிலைநாட்டல், வாழ்க்கைக்குச் சுமூகமானதொரு சூழலை எற்படுத்தல்.

# 4. வறுமை ஒழிப்பில் பெண்கள்

"வறுமை ஒழிப்பிற்குரிய வழிகளில் பெண்கள் வலுவூட்டலும் ஒன்றாகும்." ஐ.நா.அபிவிருத்தித் திட்டம்

## 4.1 பெண்களும் வறுமையும்

வறுமையால் பாதிக்கப்பட்டுள்ள மக்களில் பெண்களே அதிகளவில் உள்ளடக்கப்பட்டுள்ளார்கள். மேலும் வளர்முக நாடுகளில், ஆண்களைத் தலைவர்களாகக் கொண்ட குடும்பங்களுடன் ஒப்பிடுகையில் பெண்களைத் தலைவர்களாகக் கொண்ட குடும்பங்கள் அதிகளவில் வறுமையில் வாடுகின்றன. அபிவிருத்தியடைந்து கொண்டிருக்கும் நாடுகளில் பெண்களைத் தலைவர்களாகக் கொண்ட குடும்பங்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து கொண்டு செல்கிறது. இதைவிட பெண்களுக் கெதிரான வன்முறைகள், அடக்குமுறைகள், சுரண்டல்கள் என்பனவும் வறுமையில் வாடும் பெண்களின் எண்ணிக்கையை அதிகரிக்கின்றன. ஆகவே, தற்போது வறுமையானது பெண்ணிலைப்படுத்தப்படுகிறது (Feminization of poverty). எனவே தற்கால வறுமை ஒழிப்புத் திட்டங்களில் பெண்களே முதன்மைப்படுத்தப்படல் வேண்டும்.

## 4.2 வறுமையால் பெண்கள் அதிகம் பாதிக்கப்படுவதற்கான காரணங்கள்

- குடும்பத்தலைவர்கள் இழக்கப்படும் போது அல்லது குடும்பத்தை விட்டு விலகும் போது குடும்ப வருமானம் குறைவடைகிறது அல்லது

நிறுத்தப்படுகிறது. இதனால் பெண்களும் சிறுவர்களும் வறுமை யில் வாட நேரிடுகிறது.

- குடும்பத்தலைவர்கள் மது மற்றும் போதைப் பொருட் பாவனைக்கு உள்ளாகும் போது அல்லது நோய்களால் பீடிக்கப்படும் போது குடும்ப வருமானம் குறைவடைவதால் பெண்கள் வறுமையில் வாட நேரிடுகிறது.

- ஆண்கள் வேலைவாய்ப்புக்களைத் தேடி வெளியிடங்களுக்கு அல்லது வெளிநாடுகளுக்கு செல்வதால் குடும்பத்தைப் பராமரிக் கும் பொறுப்பு பெண்களிடம் விடப்படுகிறது.

- சமூகக் கட்டுப்பாடுகள் கூடியளவில் பெண்களை நோக்கியிருத் தல்.

- கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் ஆண்களுக்கே முன்னுரிமை அளிக்கப்படல்.

- வறுமை ஒழிப்புத்திட்டங்களில் பெண்கள் முன்னிலைப்படுத் தப்படாமை அல்லது பெண்கள் பங்குபற்றாமை.

- கல்வியறிவு வீதம் பெண்களிடத்தில் குறைவாகக் காணப்படல். இதனால் வேலைவாய்ப்புகளை பெறுவதில் சிரமங்கள் எற்படல்.

## 4..3 வறுமை ஒழிப்பில் பெண்கள் எவ்வாறு பங்களிப்பு வழங்க முடியும்?

- **சுயதொழில்களில் ஈடுபடல்**

  பெண்கள் தையல், வீட்டுத்தோட்டம் உணவுப் பொருட்கள் தயாரித் தல் போன்ற சுயதொழில்களில் ஈடுபடுவதன் மூலம் குடும்ப வருமானத்தை அதிகரிக்க முடியும்.

- **பெண்கள் வேலைக்கு செல்லல்**

  பெண்கள் தங்களின் கல்வியறிவிற்குப் பொருத்தமான வகையில் வேலைகளை அரச அல்லது தனியார் துறையில் தெரிவு செய்வதன் மூலம் குடும்ப வருமானத்தை அதிகரிக்க முடியும். பெண்களை தலைவர்களாகக் கொண்ட குடும்பங்கள் குடும்பத் தலைவர்களின் வருமானத்திலேயே தங்கியுள்ளது.

- **சேமிப்பை அதிகரித்தல்**

  செலவுகளைக் குறைப்பதன் மூலம் குடும்ப சேமிப்பை அதிகரித்தல்.

- **வறுமை ஒழிப்புத் திட்டங்களில் பங்கெடுத்தல்**

  வறுமை ஒழிப்புத் திட்டங்களில் பெண்கள் முன்வந்து பங்கெடுத்தல் மூலம் அத்திட்டங்களின் வெற்றிக்கு உதவுதல்.

- **குடும்ப உறுப்பினர்களுக்கு வழிகாட்டல்**

  மது மற்றும் போதைப் பழக்கங்களுக்கு அடிமையாகியுள்ள குடும்ப உறுப்பினர்களுக்கு ஆலோசனைகளை வழங்கி அவர்களை

நல்வழிப்படுத்தல். பிள்ளைகளுக்குச் சிறந்த கல்வியறிவையும் தொழிற்பயிற்சிகளையும் வழங்குதல் மூலம் வளமான எதிர்காலச் சமுதாயத்தை உருவாக்குதல்.

### 4.4 வறுமை ஒழிப்பில் பெண்களின் பங்களிப்பினை எவ்வாறு அதிகரிக்கலாம்?

- **பெண்களின் கல்வி அறிவினை விருத்திசெய்தல்**

பாடசாலைக்கல்வி, தொலைக்கல்வி, மற்றும் முறைசாராக் கல்வித் திட்டங்கள் மூலம் பெண்களின் எழுத்தறிவு வீதத்தை அதிகரித்தல்.

- தொழிற்பயிற்சிகளை வழங்குதல்

பெண்களுக்கு மட்பாண்டம் செய்தல், விவசாய உற்பத்தி, நெசவு, தையல் போன்ற தொழிற்பயிற்சிகளை வழங்குவதன் மூலம் அவர்களின் வேலைவாய்ப்பு வீதத்தினை அதிகரிக்கலாம்.

- **தகவல் தொழிநுட்பக் கல்வியை வழங்குதல்**

பெண்களுக்கு தகவல் தொழிநுட்பக் கல்வியை வழங்குவதன் மூலம் தொழில்வாய்ப்புகளை அதிகரிக்கலாம்.

- **தொழில் வழிகாட்டல்**

பெண்களுக்குப் பொருத்தமான தொழில்களை இனங்கண்டு பெற்றுக்கொடுத்தல். தொழில் அபிவிருத்திக்கும் புதிய தொழில் முயற்சிகளுக்கும் ஆலோசனை வழங்கல்.

- வறுமை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தல்

  பெண்களிடத்தில் வறுமை பற்றிய விழிப்புணர்வை கலந்துரையாடல் பயிற்சிப்பட்டறைகள் ஒழுங்குசெய்வதன் மூலம் ஏற்படுத்தல்.

- தொழில் வாய்ப்புகளில் பெண்களுக்குச் சமவுரிமை வழங்குதல்.

- வறுமை ஒழிப்புத் திட்டங்களில் பெண்களின் பங்களிப்பினை ஊக்குவித்தல்.

- விவசாயத்துறை அபிவிருத்தியில் பெண்களின் பங்களிப்பினை அதிகரித்தல்.

# 5. விவசாயமும் பெண்களும்

> "வளர்முக நாடுகளின் விவசாயத்துறையில் முதலீடுகளை மேற்கொள்ளல் பட்டினி, வறுமை ஒழிப்பிற்கு அவசியமானதாகும்"
>
> ஐ. நா. சபை.

## 5.1 வறுமை ஒழிப்பில் விவசாய அபிவிருத்தி

உலக வரலாற்றில் விவசாயத்திற்கு எப்போதும் ஓர் தனியிடம் உண்டு. உலக உணவுத் தேவையை அத்துறையே பூர்த்தி செய்கிறது. தற்காலத் தில் விவசாயத்துறையின் முக்கியத்துவம் மேலும் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. உலக சனத்தொகையானது நாளுக்கு நாள் பெருகுவதால், அச்சனத்தொகை அதிகரிப்பிற்கு ஏற்ப உணவு உற்பத்தி யைக் பெருக்கு வது பெரும் சவாலாக மாறியுள்ளது. நகரங்கள் கைத் தொழில் மயமாகி விட்ட நிலையில் கிராமப்புரங்களிலேயே பெருமளவு விவசாய உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

விவசாய அபிவிருத்தியானது கிராமப்புற வறுமை ஒழிப்பு நடவடிக்கைளில் பெரும் பங்காற்றுகிறது. ஏனெனில் உலகளாவிய ரீதியில் பெருமளவு வறுமையால் பீடிக்கப்பட்ட மக்கள் முக்கியமாக பெண்களும் குழந்தை களும் கிராமப்புறங்களிலேயே வாழ்ந்து வருகின்றார்கள். இம்மக்களின் வாழ்வாதாரத்தையும், வாழ்க்கைத்தரத்தையும் விவசாயமே தீர்மானிக் கின்றது. எனவே விவசாய அபிவிருத்தியானது வறுமை ஒழிப்பில் முக்கிய பங்காற்றுகிறது.

## 5.2 விவசாய அபிவிருத்தியால் ஏற்படும் நன்மைகள்

- சனத்தொகைப் பெருக்கம் அதிகமுள்ள, ஏழ்மையான நாடுகளில் விவசாயத்துறையை முன்னேற்றுவதன் மூலம் பெருமளவு வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுக்க முடியும்.

- உணவு உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் உணவுப் பொருட்க ளின் விலையைக் கணிசமான அளவில் குறைக்கலாம்.

- உணவிற்காக செலவிடப்படும் தொகை குறையும் போது, வருமானத்தில் மீதமுள்ள பங்கினைச் சேமிக்கலாம். இதனால் ஏழ்மையான மக்களின் சேமிப்பு மற்றும் வாழ்கைத்தரம் அதிகரிக் கும்.

- தேவையான உணவினை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்வதன் மூலம் வெளிநாட்டு உணவு இறக்குமதியைக் குறைக்கலாம் இதனால் பெருமளவு அந்நியச் செலவாணியை மீதமாக்கலாம்.

- அதிகமாக உற்பத்தி செய்யப்பட்ட விவசாய விளைபொருட்களை ஏனைய தேவையுள்ள நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யலாம். இதனால் நாட்டின் வருமானம் அதிகரிக்கும்.

- நாட்டின் வருமானம் அதிகரிக்கும் போது அதிகளவு மக்கள் நலத்திட்டங்களை ஆரம்பித்து மக்களின் வறுமையை ஒழித்து வாழ்க்கைத்தரத்தை அதிகரிக்கலாம்.

5..3 விவசாய அபிவிருத்திக்குரிய வழிவகைகள்

- **விவசாய உட்கட்டமைப்பை அபிவிருத்தி செய்தல்**

விவசாய வீதிகள், நீர்ப்பாசனம், சந்தைவாய்ப்புகள், விவசாய ஆராய்ச்சிகள் என்பவற்றை அபிவிருத்தி செய்தல் மூலம் நிலையான விவசாய அபிவிருத்திக்கு அத்திவாரமிடல்.

- **விவசாய அபிவிருத்திக்குச் சார்பான கொள்கைகளை உருவாக்குதல்**

மானிய விலையில் உரவகைகள், விவசாய இரசாயனங்கள் மற்றும் எரிபொருட்களை வழங்குதல், விவசாய இயந்திர வகைகளைத் தீர்வையற்ற முறையில் இறக்குமதி செய்ய உதவுதல், விவசாய பொருட்களுக்கான ஏற்றுமதித் தீர்வைகளைக் குறைத்தல் போன்ற விவசாய அபிவிருத்திக்குச் சார்பான கொள்கைகளை உருவாக் குதல்.

- **விவசாய உற்பத்திப் பொருட்களுக்கான சந்தைவாய்ப்புக ளைப் பெற்றுக்கொடுத்தல்**

விவசாய உற்பத்திப் பொருட்களுக்கான சந்தை வாய்ப்புகள் அதிகரிக்கும் போது அவற்றின் மீதான கேள்வியும் அதிகரிக்கும். இதனால் கூடிய வருமானத்தைப் ' பெறுவதோடு இடைத்தரகர் களின் தலையீட்டையும் குறைக்கலாம்.

- **விவசாயிகளுக்கு நிதி வசதிகளைப் பெற்றுக்கொடுத்தல்**

நீண்ட மற்றும் குறுகிய கால விவசாயக் கடன்களை வழங்கல், பயிர் மற்றும் கால்நடைகளுக்கான காப்புறுத்திட்டம் என்பவற்றை

அபிவிருத்தி செய்தல், மேலும் வயதான விவசாயிகளுக்கு ஓய்வூதியம் வழங்கல் போன்ற வசதிகளைப் மேற்கொள்ளல்.

- **விவசாயிகளின் வாழ்க்கைத்தரத்தினை மேம்படுத்தல்**

கிராமப்புறங்களில் பாடசாலைகள், மருத்துவமனைகள், வங்கி மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல். நகர மக்கள் பெறக்கூடிய சகல அத்தியாவசிய வசதிக ளையும் கிராம மக்களுக்குப் பெற்றுக் கொடுத்தல்.

- **விவசாயத் தொழிநுட்ப அபிவிருத்தி**

விவசாய ஆராய்ச்சிகளை முழு அளவில் மேற்கொண்டு புதிய இனங்கள், புதிய பயிர்ச்செய்கை உத்திகளைக் கண்டுபிடித்தல். விவசாய விஞ்ஞானிகளுக்கு ஊக்கமளித்து புதிய கண்டுபிடிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தல்.

- **விவசாய விரிவாக்கற் சேவைகளை அபிவிருத்தி செய்தல்**

விவசாய விரிவாக்கற் சேவைகளை மேம்படுத்தி விவசாய ஆராய்சிகளின் பலாபலன்களை சாதாரண விவசாயிகளும் அனுப விக்க வழிவகுத்தல்.

**5.4 தற்காலத்தில் பெண்கள் அதிகளவில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான காரணங்கள்**

- **குடும்ப வருமானம் குறைவடைதல்**

  குடும்பச் செலவினங்கள் அதிகரித்துக் காணப்படுவதாலும் குடும்ப வருமானத்தைப் பெருக்குவதற்காகவும் ஆண்களுக்கு உதவியாக அல்லது தனித்துப் பெண்கள் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்கள்.

- **தொழிலாளர்களின் அதிகரித்த வேதனமும் தொழிலாளர் தட்டுப்பாடும்**

  கிராமப்புறங்களில் ஆண் தொழிலாளர்களுக்கு கூடியளவு தட்டுப் பாடும் வேதனமும் அதிகரித்துள்ளது. எனவே பெண்கள் அதிக ளவு விவசாயத்தில் ஈடுபடவேண்டியுள்ளது.

- **ஆண்கள் கிராமப்புறங்களில் இருந்து வெளியேறல்**

  கல்வி, வேலைவாய்ப்புக்களைத் தேடி ஆண்கள் கிராமப் பகுதிக ளிலிருந்து நகரங்களுக்கும் ஏனைய நாடுகளை நோக்கியும் இடம்பெயர்வதால் கிராமங்களில் ஆண் விவசாயிகளுக்கு அதிகள வில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

- **நோய்கள், உள்நாட்டு யுத்தங்களால் ஆண்கள் கூடியளவில் பாதிக்கப்படல்**

  எய்ட்ஸ், காசநோய், போன்ற வியாதிகளாலும் உள்நாட்டு குழப்பங்களாலும் ஆண்களே கூடியளவு பாதிக்கப்படுகிறார்கள்

அல்லது உயிரிழக்கின்றார்கள். இதனால் குடும்பப் பொறுப்புகள் பெண்களிடம் விடப்படுகின்றது.

- **பெண்களைத் தலைவர்களாகக் கொண்ட குடும்பங்களின் எண்ணிக்கை அதிகரித்தல்**

  குடும்பத் தலைவர்கள் இழக்கப்படல் அல்லது தொழில் செய்ய முடியாமற் போதல் போன்ற காரணங்களால் குடும்பங்களைப் பராமரிப்பதற்காகப் பெண்களே கூடியளவில் விவசாய நடவடிக்கை களில் ஈடுபட்டுள்ளார்கள்.

## 5.5 விவசாயத்தில் பெண்களின் பங்களிப்பு

விவசாயத்தில் ஆண்களுக்கு நிகராக பெண்களும் ஈடுபட்டுள்ளனர். உலகின் 50 வீதமான உணவுப்பொருட்கள், முக்கியமாக அபிவிருத்தி யடைந்து வரும் நாடுகளில் பெண்களாலேயே தயாரிக்கப்படுகின்றது. பெண்கள் பொதுவாக இடைப்பயிர்ச் செய்கை நடவடிக்கைகள், உணவு பதனிடல், சிறிய மிருகங்களின் வளர்ப்பு, விவசாயப் பொருட்களின் விற்பனை போன்றவற்றில் ஈடுபட்டுள்ளார்கள். எனினும் பெண்கள் ஆண்களுக்கு நிகரான வருமானத்தையும் ஏனைய உரிமைகளையும் பெறுவதில்லை.

### அட்டவணை 1: உலக விவசாயத்துறையில் பெண்களின் பங்களிப்பு

| | 1970 | 1990 | 2000 (மதிப்பீடு) | 2010 (மதிப்பீடு) |
|---|---|---|---|---|
| உலகின் விவசாய சனத்தொகை (ஆயிரங்களில்) | 2,001,855 | 2,465,015 | 2,601,722 | 2,667,219 |
| உலகின் பெண்விவசாயத் தொழிலாளர்கள் (ஆயிரங்களில்) | 382,605 | 523,315 | 579,771 | 621,308 |
| மொத்த விவசாய தொழிலாளர் படையில் பெண்களின் பங்களிப்பு (% ) | 45.87 | 47.34 | 48.10 | 48.74 |

**ஆதாரம் :-** ஐ .நா உணவு விவசாய ஸ்தாபனம்

ஆண்கள் விவசாயத்தில் ஈடுபட்டு குடும்பத்தின் தேவைகளை நிறைவேற்றினாலும் வருமானமே அவர்களின் பிரதான நோக்கமாக உள்ளது. உதாரணமாக ஆண்கள் பணப்பயிர்களான மிளகாய், வெங்காயம் போன்றவற்றையும் பிரதான உணவுப்பயிர்களாக நெல், கோதுமை போன்றவற்றையும் பெருமளவில் பயிரிடுகின்றார்கள். ஆனால் பெண்கள் தமது குடும்பத்தின் உணவுத்தேவையை பூர்த்தி செய்வதற்காகவே பிரதானமாக விவசாயத்தில் ஈடுபடுகின்றனர். உதாரணமாக பெண்கள் மரக்கறிப் பயிர்களையும், உப உணவுப் பயிர்களான பயறு, கௌபீ போன்றவற்றையும் உற்பத்தி செய்வதிலேயே கூடிய ஈடுபாட்டைக் காண்பிக் கிறார்கள். ஆகவே விவசாயத்தில் பெண்களின் பங்களிப்பானது குடும்பத் தின் உணவுப் பாதுகாப்பினை மையமாகக் கொண்டே காணப்படுகின்றது.

# 6. முடிவுரை

வறுமையானது பாரிய சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தோற்றுவிப்பதுடன் அபிவிருத்திக்கும் தடையாக உள்ளது. வறுமையினால் கூடியளவு பெண்களே பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே வறுமை ஒழிப்பு நடவடிக்கைகளில் பெண்கள் கூடியளவான பங்களிப்பினை வழங்க வேண்டும். வளர்முக நாடுகளின் வறுமை ஒழிப்பில் விவசாயதுறை பெரும் பங்காற்றுகின்றது. மேலும் உலகின் விவசாயத்துறையில் பெண்களின் பங்களிப்பு அதிகரித்துக்கொண்டு செல்கிறது. இதனால் விவசாயத் துறையின் அபிவிருத்தி மூலமும் பெண்களின் வறுமையை ஒழிக்க முடியும்.

## 7. உசாத்துணை


Anon. (2005). Growth and poverty reduction: the role of agriculture. Department for international development (DFID), London, U.K. www.dfid.gov.uk/Pubs/files/growth-poverty-agriculture.pdf (accessed on 25 June 2008)

Poverty. http://en.wikipedia.org/poverty. (accessed on 27 June 2008)

UNDP Poverty report 2000. http://www.undp.org/povertyreport.html. (accessed on 25 June 2008)

Gender Statistics. FAO. http://www.fao.org/Gender/en/stats-e.htm. (accessed on 26 June 2008)

Print
Michael's Mobile Printers
90, Bar Road, Batticaloa.
Tel - 060 2642012, 065 4900485

ISBN : 978-955-1443-22-1